ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 3.9 – என்னாதன்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.9 – என்னாதன்

‡ என் நாதன் தேவிக்கு ⋆
அன்றின்பப் பூ ஈயாதாள் ⋆
தன் நாதன் காணவே ⋆
தண் பூ மரத்தினை ⋆
வன் நாதப் புள்ளால் ⋆
வலியப் பறித்திட்ட ⋆
என் நாதன் வன்மையைப் பாடிப் பற ⋆
எம்பிரான் வன்மையைப் பாடிப் பற ‖ **3.9.1** ‖

என் வில் வலி கண்டு போ என்று ⋆
எதிர் வந்தான் ⋆
தன் வில்லினோடும் ⋆
தவத்தை எதிர் வாங்கி ⋆
முன் வில் வலித்து ⋆
முது பெண் உயிருண்டான் ⋆
தன் வில்லின் வன்மையைப் பாடிப் பற ⋆
தாசரதி தன்மையைப் பாடிப் பற ‖ **3.9.2** ‖

உருப்பிணி நங்கையைத் ⋆
தேர் ஏற்றிக் கொண்டு ⋆
விருப்புற்றங்கேக ⋆
விரைந்தெதிர் வந்து ⋆
செருக்குற்றான் ⋆

வீரம் சிதையத் ⋆
தலையைச் சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப் பற ⋆
தேவகி சிங்கத்தைப் பாடிப் பற ‖ **3.9.3** ‖

மாற்றுத்தாய் சென்று ⋆
வனம் போகே என்றிட ⋆
ஈற்றுத்தாய் பின் தொடர்ந்து ⋆
எம்பிரான் ! என்றழ ⋆
கூற்றுத்தாய் சொல்லக் ⋆
கொடிய வனம் போன ⋆
சீற்றம் இலாதானைப் பாடிப் பற ⋆
சீதை மணாளனைப் பாடிப் பற ‖ **3.9.4** ‖

பஞ்சவர் தூதன் ஆய்ப் ⋆
பாரதம் கைசெய்து ⋆
நஞ்சுமிழ் நாகம் கிடந்த ⋆
நல் பொய்கை புக்கு ⋆
அஞ்சப் பணத்தின் மேல் ⋆
பாய்ந்திட்டருள் செய்த ⋆
அஞ்சன வண்ணனைப் பாடிப் பற ⋆
அசோதை தன் சிங்கத்தைப் பாடிப் பற ‖ **3.9.5** ‖

முடி ஒன்றி ⋆
மூவுலகங்களும் ஆண்டு ⋆
உன் அடியேற்கருள் என்று ⋆
அவன் பின் தொடர்ந்த ⋆
படியில் குணத்துப் ⋆
பரத நம்பிக்கு ⋆

அன்று அடிநிலை ஈந்தானைப் பாடிப் பற ⋆
அயோத்தியர் கோமானைப் பாடிப் பற ‖ **3.9.6** ‖

காளியன் பொய்கை ⋆
கலங்கப் பாய்ந்திட்டு ⋆
அவன் நீள்முடி ஐந்திலும் ⋆
நின்று நடம் செய்து ⋆
மீள அவனுக்கு ⋆
அருள் செய்த வித்தகன் ⋆
தோள் வலி வீரமே பாடிப் பற ⋆
தூ மணிவண்ணனைப் பாடிப் பற ‖ **3.9.7** ‖

தார்க்கிளந் தம்பிக்கு ⋆
அரசீந்து ⋆
தண்டகம் நூற்றவள் ⋆
சொல் கொண்டு போகி ⋆
நுடங்கிடைச் சூர்ப்பணகாவைச் ⋆
செவியொடு மூக்கு ⋆
அவள் ஆர்க்க அரிந்தானைப் பாடிப் பற ⋆
அயோத்திக்கரசனைப் பாடிப் பற ‖ **3.9.8** ‖

மாயச் சகடம் உதைத்து ⋆
மருதிறுத்து ⋆
ஆயர்களோடு போய் ⋆
ஆநிரை காத்து ⋆
அணி வேயின் குழல் ஊதி ⋆
வித்தகனாய் நின்ற ⋆

ஆயர்கள் ஏற்றினைப் பாடிப் பற ⋆
ஆநிரை மேய்த்தானைப் பாடிப் பற ॥ **3.9.9** ॥

காரார் கடலை அடைத்திட்டு ⋆
இலங்கை புக்கு ⋆
ஓராதான் பொன்முடி ⋆
ஒன்பதோடொன்றையும் ⋆
நேரா அவன் தம்பிக்கே ⋆
நீள் அரசீந்த ⋆
ஆராவமுதனைப் பாடிப் பற ⋆
அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற ॥ **3.9.10** ॥

‡ நந்தன் மதலையைக் ⋆
காகுத்தனை நவின்று ⋆
உந்தி பறந்த ⋆
ஒளியிழையார்கள் சொல் ⋆
செந் தமிழ்த் தென் புதுவை ⋆
விட்டுசித்தன் சொல் ⋆
ஐந்தினோடைந்தும் வல்லார்க்கு ⋆
அல்லல் இல்லையே ॥ **3.9.11** ॥

அடிவரவு — என்னாதன் என்வில் உருப்பிணி மாற்று பஞ்சவர் முடி காளியன் தார்க்கு மாயம் காரார் நந்தன் நெறிந்த

என்னாதன் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்